# தமிழர் கல்வி மேம்பாட்டுப் பேரவை

## அரையாண்டுத் தேர்வு - 2010 - 2011

## தமிழ்மொழி - ஆண்டு 10

சுட்டெண்:........................................................... நேரம்: 150 மணித்துளிகள்

**1) தேர்விடை வினா விடைக்குரிய எழுத்தின் கூட்டில் புள்ளடி இடுக.**

1. உயிர்மெய் எழுத்துகளை இப்படியும் கூறுவர்.

அ) சார்பெழுத்துகள் ஆ) நெட்டெழுத்துகள்
இ) குற்றெழுத்துகள் ஈ) முற்றெழுத்துகள்

அ) ☐ ஆ) ☐ இ) ☐ ஈ) ☐

2. உயிரும் மெய்யுமாக முப்பது எழுத்தும்

அ) ஈற்றெழுத்து ஆ) மாற்றெழுத்து இ) முதலெழுத்து ஈ) முடிவெழுத்து

அ) ☐ ஆ) ☐ இ) ☐ ஈ) ☐

3. அகநானூறு என்னும் நூல் தொகுக்கப்பட்ட காலம்

அ) முதற்கழகக்காலம் ஆ) இடைக்கழகக்காலம்
இ) இக்காலக்கழகம் ஈ) கடைக்கழகக்காலம்

அ) ☐ ஆ) ☐ இ) ☐ ஈ) ☐

4. தனிப்பாடல்களால் தொகுக்கப்பட்ட நூல்களுள் ஒன்று

அ) பத்துப்பாட்டு ஆ) எட்டுத்தொகை இ) சிலப்பதிகாரம் ஈ) நன்னூல்

அ) ☐ ஆ) ☐ இ) ☐ ஈ) ☐

5. கழகக்காலத் தமிழரின் வாழ்வு இதையொட்டி இருந்தது.

அ) நிலப்பாகுபாட்டை ஆ) இனப்பாகுபாட்டை
இ) மதப்பாகுபாட்டை ஈ) திணைப்பாகுபாட்டை

அ) ☐ ஆ) ☐ இ) ☐ ஈ) ☐

6. சுதந்திரம் என்ற சொல்லுக்கு நற்றமிழ்ச்சொல்

அ) தன்னிச்சை ஆ) விடுதலை இ) மேலாண்மை ஈ) அடக்குமுறை

அ) ☐ ஆ) ☐ இ) ☐ ஈ) ☐

7. நிலப்பாகுபாட்டில் மண்ணியல்பையும் காலநிலையையும் இப்படிக் கூறுவர்.

அ) உரிப்பொருள் ஆ) கருப்பொருள் இ) பருப்பொருள் ஈ) முதற்பொருள்

அ) ☐ ஆ) ☐ இ) ☐ ஈ) ☐

8. வயலும் வயல்சார்ந்த இடமும்

அ) குறிஞ்சி ஆ) முல்லை இ) மருதம் ஈ) பாலை

அ) ☐ ஆ) ☐ இ) ☐ ஈ) ☐

9. செவ்வழி என்பது எவ்வேளைக்கு உரிய பண்

அ) காலைவேளை ஆ) மாலைவேளை இ) பகல்வேளை ஈ) இரவுவேளை

அ) ☐ ஆ) ☐ இ) ☐ ஈ) ☐

10. சாயுங்காலத்தை இப்படியும் அழைப்பர்

அ) வெள்ளந்தி ஆ) செவ்வந்தி இ) செவ்வேளை ஈ) காரந்தி

அ) ☐ ஆ) ☐ இ) ☐ ஈ) ☐

11. எழுவாய் செயப்படுபொருள் பயனிலை இவற்றை விளக்குவது

அ) பொருள்மொழி ஆ) வருமொழி இ) அடைமொழி ஈ) கடைமொழி

அ) ☐ ஆ) ☐ இ) ☐ ஈ) ☐

12. கண்ணகிக்குச் சிலையமைக்கக் கல்சுமந்த வடவர்

அ) கனகவிசயர் ஆ) பரணகபிலர் இ) சேரசோழர் ஈ) இந்திரசந்திரர்

அ) ☐ ஆ) ☐ இ) ☐ ஈ) ☐

13. உன் பள்ளியில் நாளைக்கு விடுமுறையா? இச்சொல்லியம்

அ) ஏவல் ஆ) வினா இ) கூற்று ஈ) விருப்பு

அ) ☐ ஆ) ☐ இ) ☐ ஈ) ☐

14. மீன்பாடும் வாவியுள்ள பட்டினம்

அ) திருமலை ஆ) கீரிமலை இ) மட்டக்களப்பு ஈ) முல்லைத்தீவு

அ) ☐ ஆ) ☐ இ) ☐ ஈ) ☐

15. குமரிக்கண்டம் மூழ்கியுள்ள மாவாரி

அ) அத்திலாந்திக் ஆ) இந்து இ) பசுபிக் ஈ) பாரசீகம்

அ) ☐ ஆ) ☐ இ) ☐ ஈ) ☐

16. குமரிக்கண்ட மாந்தனின் இடையறாத தொடர்போடு உள்ள நாடு

அ) இலங்கை ஆ) தென்னாபிரிக்கா இ) பம்பாய் ஈ) வடவிந்தியா

அ) ☐ ஆ) ☐ இ) ☐ ஈ) ☐

17. இன்றைய இந்தியாவின் பண்டைய தமிழ்ப்பெயர்

அ) பாரதம் ஆ) நாவலந்தீவு இ) இமாலயா இ) ஆரியநாடு

அ) ☐ ஆ) ☐ இ) ☐ ஈ) ☐

18. கட்டினான் என்ற தன்வினையைப் பிறவினை ஆக்கினால்

அ) கட்டியவன் ஆ) கட்டுவான் இ) கட்டுவித்தான் ஈ) கட்டான்

அ) ☐ ஆ) ☐ இ) ☐ ஈ) ☐

19. வினையாலணையும் பெயருக்கு எடுத்துக்காட்டு

அ) படித்தான் ஆ) படிப்பித்தான் இ) படிப்பியான் ஈ) படித்தவன்

அ) ☐ ஆ) ☐ இ) ☐ ஈ) ☐

20. உண்ணேன் என்னும் எதிர்மறை வினையின் உடன்பாட்டு வினை

அ) உண்கிறேன் ஆ) உண்பேன் இ) உண்டேன் ஈ) உண்டனான்

அ) ☐ ஆ) ☐ இ) ☐ ஈ) ☐

21. அச்சமின்றி ஆடிப்பாடுவதற்கு வேண்டியது

அ) புல்வெளி ஆ) கடற்கரை இ) விடுதலை ஈ) காவல்

அ) ☐ ஆ) ☐ இ) ☐ ஈ) ☐

22. தமிழ்மேல் ஆணை என்னும் பாடலை இயற்றியவர்

அ) பாரதி ஆ) காசியானந்தன்

இ) பாரதிதாசன் ஈ) காளமேகம்

அ) ☐ ஆ) ☐ இ) ☐ ஈ) ☐

23. ஓடினான் இவ்வினைச்சொல்

அ) குறிப்புவினை ஆ) எச்சவினை இ) தெரிநிலைவினை ஈ) தெரியாவினை

அ) ☐ ஆ) ☐ இ) ☐ ஈ) ☐

24. கண்ணதாசன் பாடலில், கலைகளில் அவள் ______________ கீறிட்ட இடத்தில் வரவேண்டிய சொல்

அ) வல்லவள் ஆ) ஓவியம் இ) மல்லிகை ஈ) மலர்விழி

அ) ☐ ஆ) ☐ இ) ☐ ஈ) ☐

25. செயப்படுபொருள் குன்றியவினை

அ) கண்டேன் ஆ) எழுதினேன் இ) பாடினேன் ஈ) ஓடினேன்

அ) ☐ ஆ) ☐ இ) ☐ ஈ) ☐

26. குமரிக்கண்டத்தில் ஓடிய ஆறு

அ) கங்கை ஆ) காவிரி இ) பஃறுளி ஈ) நைல்

அ) ☐ ஆ) ☐ இ) ☐ ஈ) ☐

27. பைபிள் பழைய ஏற்பாட்டில் கடற்கோள் பற்றிய கதை

அ) நோவா கதை ஆ) சாலமோன் கதை
இ) ஆதாம் கதை ஈ) மோசியசு கதை

அ) ☐ ஆ) ☐ இ) ☐ ஈ) ☐

28. இராப்பகல் இச்சொல்

அ) தனிமொழி ஆ) தொடர்மொழி இ) பொதுமொழி ஈ) இருமொழி

அ) ☐ ஆ) ☐ இ) ☐ ஈ) ☐

29. பெயர்ச்சொற்கள் எத்தனை வகைப்படும்

அ) நான்கு ஆ) ஐந்து இ) ஏழு ஈ) ஆறு

அ) ☐ ஆ) ☐ இ) ☐ ஈ) ☐

30. நடித்தான் என்ற செய்வினையைச் செயப்பாட்டுவினை ஆக்கினால்

அ) நடிக்கப்பட்டது ஆ) நடித்தது இ) நடிப்பித்தான் ஈ) நடிக்கிறான்

அ) ☐ ஆ) ☐ இ) ☐ ஈ) ☐

(புள்ளிகள் 30)

## 2) தரப்பட்டுள்ள இலக்கண / மொழியியல் வினாக்களுக்கு விடை தருக.

1. கரணிய இடுகுறிப் பெயரை விளக்குக.

___

___

2. கருத்தடிப்படையில் வாக்கிய வகைகள் நான்கையும் தந்து, ஒன்றை விளக்குக.

___

___

3. பொதுமொழிச்சொல் ஒன்று தந்து, அது பொதுமொழி என்பதை விளக்குக.

___

___

4. செய்வினைக்கும் செயற்பாட்டு வினைக்கும் உள்ள வேறுபாட்டை எடுத்துக்காட்டுத் தந்து விளக்குக.

___

___

5. பொருள் தருக:

1. தண்மை ________
2. வெஞ்சினம் ________
3. எழினி ________
4. புனல் ________
5. ஏதிலியர் ________
6. படிமம் ________

(புள்ளிகள் 15)

## 3) பாடலை வாசித்து, வினாக்களுக்கு முழுவிடை தருக.

***மண்ணுக்கும் பொன்னுக்கும் மாந்தர் அடிபடும்***
***மடைமையை என்சொல்வது - வாழ்வில்***
***மாந்தனே மாந்தரை மாய்த்தலும் அழித்தலும்***
***மாபெரும் கொடுமையன்றோ - உலகில்***
***விலங்குகள் செய்யாத வன்முறை செய்திடும்***
***விலங்கிலும் இழிந்ததொரு - மாந்தர்***
***பிறப்பிலே வந்ததும் இறப்பிலே வருவதும்***
***பணம்பொருளா இல்லை - இந்தப்***
***பாரிய உண்மையைத் தெரிந்திருந்தும் மக்கள்***
***பண்ணுவதேன் கொடுமை - அன்பால்***
***தன்னைப்போல் பிறரையும் தாங்கிட எண்ணாமல்***
***தான்வாழ நினைப்பதேனோ - பிறர்துயர்***
***கண்டு மகிழ்ந்திடும் கல்நெஞ்ச மானிடர்***
***கண்ட நலம் என்னவோ - சாவில்***
***கொண்டு போவதென்னவோ***

1.வாழ்வில் எதை மாபெரும் கொடுமை என்கிறார் கவிஞர்?

________________________________________

________________________________________

2. பிறப்பு, இறப்பு இரண்டிலும் நம்முடன் வராதவை எவை

________________________________________

________________________________________

3. மாந்தன் எப்பொழுது விலங்கிலும் இழிந்தவனாகிறான்?

________________________________________

________________________________________

4. கல்நெஞ்ச மானிடர் என்று கவிஞர் யாரைச் சொல்கிறார்?

________________________________________

________________________________________

5. இப்பாடலில் இருந்து நீர் விளங்கிக் கொள்வது யாது?

________________________________________

________________________________________

(புள்ளிகள் 15)

**4) தரப்பட்டுள்ள பாடநூல் வினா ஐந்திற்கும் முழுவிடைதருக.**

1. நானிலப் பாகுபாட்டில் **முதற்பொருள் கருப்பொருள் உரிப்பொருள்** மூன்றையும் விளக்குக.

2. இயற்கையின்பம் பாடத்தில் காணப்படும் மருதநிலக் காட்சியை விளக்குக.

3. மலைவாழ் மக்கள் சேரன் செங்குட்டுவனிடம் கூறிய செய்தி என்ன?

4. சிந்துவெளி சுமேரிய நாகரிகங்கள் எவ்வாறு தோன்றின?

5. இருபதாம் நூற்றாண்டின் பிற்பகுதியில் ஈழத்தமிழர்களது புலப்பெயர்விற்குக் கரணியம் என்ன?

(புள்ளிகள் 10)

## 5) பந்தியை உமது வாழிடமொழியில் மொழிமாற்றுச் செய்க.

செருமானிய அறிஞரான அல்பேர்ட் சுவைட்சர் ஒரு பேரறிஞர். குறளைப் போன்று சிறந்த கருத்துகள் கொண்ட வேறொரு நூலை நான் உலகில் காணவில்லை என்றார். அவருக்கு மிகப் பிடித்த கருத்து இல்லறம் நடத்துவதே அடுத்தவர்களை வரவேற்கத்தான் என்பது. ஒருவனும் ஒருத்தியும் இல்வாழ்கை வாழ்வது பசித்தோர்க்கு உணவளித்து வரவேற்பதற்குத் தான். இந்தக் கருத்து ஒரு புதிய கருத்து என்று பாராட்டுகிறார். உள்ளத்தில் அன்பிலார் பிறர்க்கொன்றும் ஈயார். அன்புடையாரோ பிறரக்குப் பயன்படுமானால் தமது எலும்பையே ஈவர். இதுவும் சுவைட்சரை மிகவம் கவர்ந்த கருத்து.

(புள்ளிகள் 05)

## 7) பந்தியை வாசித்து, கீழுள்ள வினாக்களுக்கு முழுவிடை தருக.

இலங்கையின் முதற்குடிகள் தமிழர் அல்ல என்று மகாவம்சம் பொய்யுரைக்கிறது. அந்தப் பொய்யைத் தூக்கிப் பிடித்துக்கொண்டு சிங்களர் இலங்கை தங்களுக்கு உரியது என்று கூச்சல் போடுகின்றனர். ஆனால், இருபதாம் நூற்றாண்டில் மேற்கொள்ளப்பட்ட அகழ்வு ஆய்வுகள் சொல்லும் கதை வேறாக இருக்கிறது. பெருங்கற்காலத்தில் மட்டுமல்ல, அதற்கு முந்திய பழைய கற்காலத்திலும் இலங்கையில் மாந்தன் வாழ்ந்தான். பழைய கற்காலத்தில் இலங்கையில் வாழ்ந்த மாந்தனது எச்சங்களும் தமிழகத்தில் காணப்படும் அதே கற்கால மாந்தனது எச்சங்களும் ஒரே தன்மையானவை என்பதே அவை கூறும் கதை. பழையகற்காலம் என்பது, மாந்தன் விலங்கு நிலையிலிருந்து வளர்ச்சி பெற்று, சிந்திக்கவும் கருவிகளைக் கையாளவும் தொடங்கிய தொடக்கநிலை. அவன் கையாண்ட முதற்கருவி கல். கல்லால் எறிந்து தாக்கவும் கல்லில் ஆயுதங்களை ஆக்கவும் அறிந்து கொண்டகாலம். எனவே, மாந்த நாகரிகம் தொடங்கிய அன்றிலிருந்து மாந்தன் இலங்கையில் வாழ்கிறான். இதை அகழ்வாய்வுகளின்போது கிடைத்த கற்கோடரிகள் உறுதி செய்கின்றன. பெருங்கற்காலத்திலும் ஆற்றங்கரை நாகரிகத்திலும் அதே மாந்தன் தான் வாழ்ந்தான். ஆகப்பிந்திய ஆற்றங்கரை நாகரிக காலத்தில் காணப்படும் புதைபொருட்களிலும் எந்த வேற்றினங்களது அடையாளங்களும் காணப்படவில்லை என்று அகழ்வாய்வு அறிஞர்கள் உறுதி செய்துள்ளனர். உலகின் முதல் மாந்தத் தோற்றத்தின் தொட்டிலாய் அமைந்தது குமரிக்கண்டம். குமரிக்கண்டத்தின் மீதிகளில் இலங்கை முதன்மையானது. எனவே, அங்கே படைப்பு முதல் வாழ்பவன் தமிழன். உலகிற்கே முதல்வனான தமிழனை இலங்கையின் முதல் மாந்தனா என்று கேட்பது சிரிப்பிற்கு இடமானது.

1. இருபதாம் நூற்றாண்டின் அகழ்வு ஆய்வுகள் கூறும் கதை என்ன?

___________________________________________

2. பழைய கற்காலம் என்பது எது?

___________________________________________

3. எந்தக் காலத்திலிருந்து இலங்கையில் மாந்தன் வாழ்கிறான்?

___________________________________________

4. குமரிக்கண்டத்தின் மீதிகளில் முதன்மையானது எது?

___________________________________________

5. எது சிரிப்பிற்கு இடமானது?

___________________________________________

(புள்ளிகள்10 )

**8) தரப்பட்டுள்ள தலைப்புகளில் ஒன்றைத் தெரிவுசெய்து, இருநூற்றைம்பது சொற்களுக்குக் குறையாமல் கட்டுரை வரைக.**

1. ஈழத்தமிழர் புலப்பெயர்வு
2. கடல்கொண்ட குமரிக்கண்டம்
3. வன்னிமக்களின் இன்றைய நிலை
4. புலம்பெயர் நாடுகளில் தமிழ்மொழிக் கல்வி

(புள்ளிகள் 20)